# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சொசைட்டி பணத்தில் ஏழு லட்ச ரூபாய் பரிசு வேண்டாம் என நிராகரித்த தமிழக BSNL ஊழியர் சங்க கூட்டணி தோழர்களே!! சபாஷ்!!! சென்னை RGB கூட்ட முடிவுகள்**

அன்பார்ந்த தோழர்களே,

சென்னை கூட்டுறவு சங்கத்தின் RGB கூட்டம் 03.01.2015 அன்று சென்னையில் நடைபெற்றது. **அந்தக் கூட்டத்தில் சொசைட்டி நிர்வாகம் அதன் RGB உறுப்பினர்களுக்கு புதிய செல்போன் வாங்குவதற்கு என்று ரூ.10,000/- (பத்தாயிரம் ரூபாய்) மற்றும் ரூ.2,500/- (இரண்டாயிரத்து ஐநூறு)) மதிப்புள்ள American Tourister Bag ஒன்றும் பரிசுகளாக வழங்கினார்கள். மொத்தம் 194 RGB உறுப்பினர்கள் உள்ளனர். இதன் மூலம் சொசைட்டிக்கு சுமார் 24 லட்ச ரூபாய்கள் செலவாகும். ஆனால் தமிழகத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான கூட்டணியில் வெற்றி பெற்ற 50க்கும் மேற்பட்ட RGBக்கள், கடந்த ஆண்டு 7.88 கோடியாக இருந்த கூட்டுறவு சங்கத்தின் லாபம் இந்த ஆண்டு, 6.19 கோடியாக குறைந்துள்ள சூழ்நிலையில், இப்படிப்பட்ட பரிசுப் பொருட்களை வாங்குவதில்லை என்று முடிவெடுத்து இவற்றை நிராகரித்துள்ளனர். தமிழ் மாநிலத்தில் உள்ள BSNL ஊழியர் சங்க RGB உறுப்பினர்களோடு, SNEA சங்க RGB தோழர்களும், SEWA BSNL சங்கத்தை சார்ந்த தோழர் சிவராமன் (கோவை) மற்றும் சென்னை தொலைபேசியில் உள்ள ஒரு சில தோழர்களும் இந்த பரிசுப் பொருளையும், பணத்தையும் வேண்டாம் என நிராகரித்துள்ளனர். சென்னை கூட்டுறவு சங்கத்திற்கு இதன் மூலம் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான கூட்டணி உறுப்பினர்கள் சுமார் ஏழு லட்ச ரூபாய்களை மிச்சப்படுத்தி உள்ளனர். பொறுப்பில் இல்லாவிட்டாலும் ஊழியர்களின் நலன் காக்கும் அமைப்பு BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான கூட்டணி தான் என்பதையும், பணத்திற்கு மயங்காத இந்த RGB தோழர்கள் இருக்கும் வரை ஊழியர்களின் பணத்தையும் நிலத்தையும் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையையும் இந்த தோழர்கள் நமக்கு தெரியப்படுத்தி உள்ளனர்.** இந்த தோழர்கள் அனைவருக்கும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. சாதாரணக் கடனுக்கான வட்டியை குறைக்க வேண்டும் என்கின்ற நமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும் அந்தக் கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளன.

1) சொசைட்டி உறுப்பினர்களுக்கு வழங்கி வரும் கம்ப்யூட்டர் கடன் தொகை ரூ.30,000/- ஆக உயர்த்தப்படுகிறது. அது 05.01.2015 முதல் வழங்கப்படும்.

2) 2013-14க்கான Dividend தொகை, 12%த்தை இந்த மாதத்திலேயே (ஜனவரி,2015ல்) வழங்கப்படும்.

3) சாதாரணக் கடன் தொகை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தப்படும்.

4) சாதாரணக் கடன் மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்று இருப்பதை மாதா மாதம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

5) குடும்ப சேம நல நிதிக்கான சந்தா மாதா மாதம் ரூ.800/-லிருந்து ரூ.1200/- ஆக உயர்த்தப்படுகிறது. இன்சூரன்ஸ் தொகை தற்போதுள்ள 4 லட்ச ரூபாய் என்பது 6 லட்ச ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

6) Thrift Fund சந்தா தற்போதுள்ள 500 ரூபாயிலிருந்து 800 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. அதற்கான வட்டி விகிதம் 8%லிருந்து 9%ஆக உயர்த்தப்படுகிறது.

7) புதியதாக விருப்பத்தின் அடிப்படையில் RD திட்டம் அமுலுக்கு வருகிறது. RDக்கான கால அளவு 12,24,36,48 & 60 மாதங்கள் என இருக்கும். அதற்கு 10% வட்டி வழங்கப்படும்.

8) RGBக்களுக்கான அமர்வு ஊதியம் 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

9) RGBக்களுக்கான தினப்படி என்பது 300 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

மேலே வரிசை எண் 3 லிருந்து 8 வரையான முடிவுகள் அனைத்தும் 90 நாட்களுக்குள் டெல்லியில் உள்ள மத்திய பதிவாளர் ஒப்புதலை பெற்று அமுல்படுத்தப்படும் என சொசைட்டி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் வெள்ளானூர் கிராமத்தில் உள்ள நிலத்தை என்ன செய்வது என்பது தொடர்பாக எந்த ஒரு விவாதமும் நடைபெறவில்லை. அதை ஊழியர்களுக்கு நிலமாகவே பிரித்துக் கொடுக்க வேண்டும், நிலம் கிடைக்காத தோழர்களுக்கு 40,000 ரூபாய் தரவேண்டும் என்கின்ற நமது போராட்டம் தொடரும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்.**